மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திரு மதி.A. சீத்தாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆனித்திங்கள் 29 ஆம் நாள்

**E.P.No. 04/2023**

**in**

**O.S.No.71/2020**

மெய்கண்டன் ..... மனுதாரர்/ வாதி

// **எதிர்**//

1. புனிதவள்ளி

2. விக்னேஷ் .....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 20.06.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை நிலுவையிலிருந்து இன்று (14.07.2023)இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள், மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவருக்கு கிரய சாசனம் செய்து கொடுக்க உத்தரவிட்டும், அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் நீதிமன்றமே மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் ஆஜர்படுத்தப்படும் முத்திரைத்தாளில் கிரய சாசனம் எழுதி கையொப்பம் செய்து பதிவு செய்துகொடுக்க

உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/வாதிகள் சிபிசி ஆர்டர் 21 ரூல்34 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

தாவா சொத்தை வாதிக்கு பிரதிவாதிகள் கேட்கும்போது கிரயம் செய்து கொடுக்க தவறும்பட்சத்தில் நீதிமன்றமே வாதிக்கு பதிவு செய்து கொடுப்பத்தில் எவ்வித ஆட்சேபணை இல்லை என்றும், தீர்ப்பாணை சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தீர்ப்புக்கடனாளிகள் மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவருக்கு கிரய சாசனம் செய்து கொடுக்க உத்தரவிட்டும், அவ்வாறு செய்யத்தவறும்பட்சம் நீதிமன்றமே கொடுக்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் வருகையில்லாததால் இம்மனுவினைப்பொறுத்து ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளனர்.

**4.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண். 71/2020-ல் சொத்தானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இருதரப்பினர்களிடையே சமரசம் பேசப்பட்டு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்து விட்டது என்றும், வாதி கோரும்போது கிரயம் செய்து கொடுப்பதாக பிரதிவாதிகள் தெரிவித்தனர் என்றும் எனவே இம்மனுவினை அனுமதிக்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

| |
|---|
| **5. இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.** |

**<u>பிரச்சனை</u> :-**

**(1).** மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. நிறைவேற்று மனு, அபிடவிட், சமரச மெமோ ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவில் மனுதாரர் அசல்

வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவார்கள்.

(2).இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு ஆஜராகாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளனர். மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணம் இல்லை. அசல் வழக்கானது தீர்ப்புக் கடனாளிகள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக மற்றும் வாதி கேட்கும்போது கிரய செய்து கொடுக்கவேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 12.03.2022 ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்துவிட்டதாக சமரச மெமோ 13.11.2017 ம் தேதியின்று தாக்கல் செய்யப்பட்டு அதன் படி பிரதிவாதிகள் நடந்துக்கொள்ளாததால் எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

(3). மனுதாரர்கள் தரப்பு வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அ.வ.எண்.71/2020 வழக்கில் நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் செய்யப்பட்டு விட்டதாகவும், கிரையசாசனம் செய்து கொடுப்பதாக கூறிவிட்டு, கிரையசாசனம் செய்து கொடுக்காமல் இருந்து வந்துள்ளனர் என்று தெரியவருகிறது. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்கள் அடிப்படையில் 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் சமரமெமோவின் படி வாதிக்கு பிரதிவாதிகள் கிரய சாசனம் செய்து கொடுக்கவேண்டும் என்று தெளிவாகிறது. எதிர்மனுதாரர்கள் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. எனவே, மேற்கண்ட காரணங்களை பொறுத்து இந்த மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 1,2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு உத்தரவு பகரப்பட்ட நாளிலிருந்து 6 மாதக்காலத்திற்குள் கிரய சாசனம்

செய்துகொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. படி செலுத்த ஒரு வாரம்.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (14.07.2023) அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)

**விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும் :** இல்லை

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)